**ந. ரங்கசாமி**
**முதலமைச்சர்**
புதுச்சேரி அரசு

सत्यमेव जयते

பாண்டிச்சேரி

தேதி: 13-01-2012

## பொங்கல் வாழ்த்துச் செய்தி

அண்மையில் வீசிய "தானே" புயலால் நமது புதுச்சேரி மாநிலம் பேரிழப்பைச் சந்தித்துள்ளது. தானே புயலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் விவசாய நிலங்கள், மீன்பிடி படகுகள், மரங்கள், கால்நடைகள், வீடுகள் உள்ளிட்ட, மாநில மக்களின் வாழ்வாதாரங்கள் அனைத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டன. மேலும், மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு முற்றிலும் தடைபட்டது.

எமதரசு உடனடியாக மேற்கொண்ட நிவாரணப்பணிகளால் நிலைமை ஓரளவு சீராகி வருகிறது. இதுபோன்ற இயற்கைச் சீற்றங்கள் நமது மனத்திட்பத்தையும் உறுதியையும் சோதிப்பவையாக சில நேரங்களில் அமைந்து விடுகின்றன. இதிலிருந்து மீள இன்னும் அதிக நம்பிக்கையோடு செயலாற்ற வேண்டியிருக்கிறது.

அந்த நம்பிக்கையை இந்த பொங்கல் பண்டிகை நமக்கு வழங்குவதாக அமைந்து, புதுச்சேரி மாநில மக்கள் அனைவரது இல்லங்களிலும் அனைத்து வளங்களையும், நலங்களையும் கொண்டுவந்து சேர்க்கட்டும் என்று கூறி அனைவருக்கும் எனது உளங்கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DEPARTMENT OF INFORMATION & PUBLICITY * GOVERNMENT OF PUDUCHERRY * PUDUCHERRY

(ந. ரங்கசாமி)

© அலு.: 2333399, 2335530, 2335328, 2335522 தொலைநகலி: 0413-2333135 இல்லம்: 2271232